# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 244 /2023
## வழக்கு சாட்சி :PW1(LW1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துகருப்பையா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கருப்பையா | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | மங்களாப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 55 |

(1 ம் எதிரி ஆஜர். 2–ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 28th day of January 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது மங்களாப்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். மங்களாப்பட்டியில் எனக்கு சொந்தமான வயல் உள்ளது. எனது வயலுக்கு அருகில் எதிரியின் வயல் உள்ளது. எனது அங்கு செல்லும பாதையில் ஆஜர் எதிரி கருவேலம்மரத்தை வெட்டிவிட்டார், இதனால் எனக்கும், அவருக்கும் முன்விரோதம் இருந்தது. 2–வது எதிா ராமன் எனக்கு ஏற்கனவே நன்கு பழக்கமானவர். பிறகு 3 நாட்கள் கழித்து 24.09.2023 ம் தேதி இரவு 08.45 மணியளவில் நான் மங்களாப்பட்டியில் உள்ள எனது ஆட்டு மந்தையில் படுத்திருந்தேன் .அப்போது ஏதோ சத்தம் கேட்டு எழுந்த போது ஏதனிப்பட்டியை சேர்ந்த ராமன் என்பவர் அரிவாளால் என்னை இடது நெற்றியில் வெட்டினார். ஆத்தாங்காட்டை சேர்ந்த பாண்டி மகன் ராமன் ஆஜர் எதிரி என்னை அடித்தார்.

2. எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. நான் உடனே எனது ஊரைச் சேர்ந்த சின்ராசு என்பவருககு போன் செய்து வரச்சொன்னேன். அவர் 108 ஆம்புலன்சை அழைத்தார். இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை செய்து விட்டு, பிறகு புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். நான் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2 வது எதிரியை பார்த்தால் அடையாளம் சொல்ல தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. மேற்சொன்ன தேதியில் 1வது எதிரி என்னை அசிங்கமாக பேசினார்கள் என்றால் இல்லை. மேற்சொன்ன 1 வது எதிரி என்னை அருகில் கிடந்த கம்பை எடுத்து என் தலையில் அடித்தார்கள் என்றால் இல்லை, எனது தொடையில் தான் அடித்தார்கள். எதிரிகள் இருவரும் என்னை பார்த்து கையில் இருந்த கம்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என கூறினார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு 1–வது எதிரி என்னை அசிங்கமாக பேசி, கீழே கிடந்த கம்பை எடுத்து என் தலையில் அடித்ததாகவும், எதிரிகள் இருவரும என்னை பார்தது கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எனது புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது ஞாபக மறதியில் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எ.த.கு.வி</u>**

1. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய காடும் ,1 வது எதிரியின் காடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். இருவரின் காட்டிற்கும் பொதுப்பாதை வழியாக செல்ல வேண்டுமா என்றால் இல்லை. மேற்சொன்ன பாதை இருவருககும் பொதுவான பாதை என்றாலும், அவர் இடத்தில்உள்ளமரத்தை வெட்டுவது தொடர்பாக எங்களுக்குள் முன்விரோதம் இருநது வந்தது என்றால் எனது இடத்தில் இருநத மரத்தை வெட்டியதால் பிரச்சனை ஏற்பட்டது. அது சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசி அன்று அந்த பிரச்சனை முடிக்கப்பட்டதா என்றால் பஞ்சாயத்து பேசவில்லை. நான் இது சம்மந்தமாக ஊரில் சொல்லி பஞ்சாயத்து பேசினேனா என்றால் இல்லை. நான் இது சம்மந்தமாக புகார் ஏதும கொடுத்தேனா என்றால் இல்லை.

2. மேற்சொன்ன சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கேணிக்கு அருகில் உள்ள ஆட்கள் நடமாட்டம் இல்லாத தனி பகுதியில் உள்ள சிறிய கூரை என்றால் சரிதான். அந்த கூரையில் ஒரு ஆள் மட்டும் தான் படுக்க முடியும் என்றால் சரிதான். மேற்சொன்ன கூரையில் மின்சார வசதி இல்லை என்றால் சரிதான், கேணியில் மட்டும மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது, லைட் வசதி இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் நல்ல இருட்டு நேரம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், எனக்கு எதிரிகளுக்கும் உள்ள முனவிரோதம் காரணமாக , எதிரிகள் என்னை தாக்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை வெட்டியதாக சொல்லப்படும் அரிவாள் எனது கட்டிலுக்கு கீழ் நான் வைத்திருநதது எனறால் இல்லை, எதிரி கொண்டு வந்தது, நான் வைத்திருந்த அரிவாள் அங்கு இருந்தது.

3. இது சம்மந்தமாக எந்த தேதியில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, புதுக்கோட்டை அரசு மருததுவமனையில் வந்து போலிசார் வாக்குமூலம் பெற்றனர். போசிரர் வாக்குமூலம் வாங்கிய போது எதிரிகள் என்னை அரிவாளால் வெட்டியதாக வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, வாக்குமூலம் அளித்தேன். புகார் வாக்குமூலத்தை என்னிடம் படித்து காட்டிய பின்பு நான் கையொப்பம் செய்தேனா என்றால் படித்து காண்பிக்கவில்லை. எனது போலிசார் விசாரணையில் என்னை எதிரிகள் தொடையில் அடித்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் விசாரிக்கும் போது என்னை எதிரிகள் தொடையில் அடித்ததாக சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது மருத்துவரிடமும் நான் அரிவாளால் தாக்கியதாக தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் , எனக்கு உள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருள்கள் குறித்து சரியாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தை, எதிரிகள் தாக்கியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.